## ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை

# பதவி வெற்றிடம்

## தகவல் தொழில்நுட்ப தொழில்நுட்பவியலாளர்
## (POST OF INFORMATION TECHNOLOGY TECHNICIAN)

மேற்குறித்த பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**தகைமைகள்** : MT 1 - தகைமை
க.பொ.த. (உ/த) பரீட்சையில் சகல பாடங்களிலும் சித்தியடைந்திருத்தல் வேண்டும் மற்றும் அங்கீகாரம் பெற்ற பல்கலைக்கழகம் அல்லது அதற்குச் சமமான நிறுவனமொன்றிலிருந்து கணனி கற்கையில் டிப்ளோமாவைப் பெற்றிருக்க வேண்டும்.

**அனுபவம்** : அரசாங்க நிறுவனம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியல் உதவியாளராக 04 வருட கால அனுபவம்.

**வயது** : 50 வயதிற்குக் குறைவானவர்களாகவிருத்தல் வேண்டும்.

**சம்பள அளவு** : MT 1 - தரம் III

ரூபா 67,520 – 10 x 730 – 74,820/- மாதாந்தம்.

மேற்படி சம்பளத்திற்கு மேலதிகமாக சபையினால் அங்கீகரிக்கப்பட்ட சகல கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.

**சேவைக்கு அமர்த்துவதற்கான நியதிகள்**: நிரந்தரம் மற்றும் ஊழியர் சேமலாப நிதிய அடிப்படையிலாகும்.

அரச சேவையில் உள்ள ஊழியர்கள் விண்ணப்பங்களை தமது நிறுவனத் தலைமையினூடாக அனுப்புதல் வேண்டும். அதன் பிரதியை நேரடியாக அனுப்பலாம். விண்ணப்பதாரர் இப்பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டால் அவரை விடுவிக்க முடியும் என நிறுவனத் தலைமையினால் வழங்கப்பட்ட சான்றிதழொன்றையும் விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

நியமனத்தை வழங்கும் / வழங்காமல் விடும் உரிமையை ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை சபை தன்னகத்தே கொண்டுள்ளது.

கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் கட்டாயம் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பதாரர்கள் 2025-07-28ஆம் திகதி அல்லது அதற்கு முன் தமது முழுமையான சுய தரவுகள் மற்றும் உறவினரல்லாத இரண்டு (02) சான்று பகர்வோரின் பெயர்களுடன் தமது விண்ணப்பங்களை கீழே கையொப்பமிட்டுள்ளவருக்கு கிடைக்கச் செய்தல் வேண்டும்.

**தலைவர்,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை,**
**தலபத்பிட்டிய, நுகேகொடை.**